**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 190/2022**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.09.2025 | தகப்பனார் பெயர்: | திருநாவுக்கரசு |
| பெயர்: | விஜயகுமார் (PW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | மருவத்தூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 62/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 10.09.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்–13.54)**

1. நான் குடியிருப்பது வைத்தீஸ்வரன்கோயில் பக்கத்தில் உள்ள மருவத்தூர் ஆகும். இந்த பிரதிவாதி குடியிருந்து வருவது குத்தாலம் தாலுக்கா கோமலுக்கு அருகில் உள்ள கொத்தங்குடி கிராமம். பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் கொத்தங்குடி கிராமத்திலேயே சத்துணவு சம்மந்தமான வேலை செய்து வருகிறார். நான் இருக்கும் இடத்திலிருந்து பிரதிவாதி இருக்கும் இடம் சுமார் 25 கி.மீ இருக்கும். எனக்கு தொழில் விவசாயம். இந்த நீதிமன்றத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக 4 வழக்குகள் உள்ளன.

2. நான் வட்டிக்கு தொழில் செய்வது சம்மந்தமாக அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது வருமானத்திற்கு நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் விவசாயம் செய்து வருவது கோயில் நிலங்களா என்றால் 3 ஏக்கர் பட்டா இடம், 10 ஏக்கர் பொது இடம். பிரதிவாதி இதற்கு முன்பு என்னிடம் கடன் வாங்கியுள்ளாரா என்றால்

இல்லை. யார் மூலமாக பணம் வாங்க வந்தார் என்றால் நான் வட்டிக்கு பணம் கொடுப்பதால் என்னிடம் நேரடியாக வாங்க வந்தார்.

3. நான் வட்டிக்கு கொடுப்பது சம்மந்தமாக செய்த விளம்பரத்தை பார்த்து தான் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்க வந்தாரா என்றால் இல்லை, அவர் எங்கள் ஊருக்கு அடிக்கடி வருவார். வா.சா.ஆ.1 ல் சோமசுந்தரம் என்பவர் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார். வேறு யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை பன்னீர் செல்வம் என்பவர் எழுதினார். அவர் சாட்சியம் அளிக்க வருவாரா என்றால் வருவார். நான் கடன் கொடுத்ததற்காக சொத்து ஆதாரங்கள் ஏதேனும் பிரதிவாதியிடமிருந்து வாங்கி வைத்துள்ளேனா என்றால் இல்லை, அவர் வேலை பார்த்து வருகிறார்.

4. பாலகுரு என்பவர் எனக்கு தெரிந்தவர், அவர் கற்கோயிலைச் சேர்ந்தவர். அவர் வேண்டியவரா என்றால் பழக்க வழக்கமானவர். வா.சா.ஆ.1 ல் மேற்குறிப்பு எழுதப்பட்டிருக்கும் மையும் அதில் கையொப்பம் செய்யப்பட்டிருக்கும் மையும வேறு வேறு என்றால் இல்லை, ஒரே மையினால் தான் உள்ளது. மேல்குறிப்பு எழுதியவரும் வா.சா.ஆ.1 ல் சாட்சி கையொப்பம் செய்தவரும் ஒரே பாலகுரு என்றால் சரிதான். ஏற்கனவே எங்கள் ஊரைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர் சிவப்பிரகாசம் என்பவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான்.

5. அவருக்கு நான் கூட்டாளியா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ல் பிரதிவாதியின் கையெழுத்தில் உள்ள 'ஜ' வும், வா.சா.ஆ.1 ல் பின்பக்கத்தில் உள்ள 'ஜ' வும் வேறு வேறாக உள்ளது என்றால் இல்லை, ஒன்றாக தான் உள்ளது. நான் கொடுத்த ரூ.30,000/- பணம் எந்த வங்கியிலிருந்து எடுத்து கொடுக்கப்பட்டது என்றால் எனது கையிருப்பில் இருந்து கொடுக்கப்பட்டது. தாவா கடன் தொகையை கொடுக்க எனக்கு பொருளாதார வசதி கிடையாது என்றால் சரியல்ல. மருவத்தூரைச் சேர்ந்த சிவப்பிரகாசம் என்பவரிடம் நான் கூட்டாளியாக இருந்ததால், அவரிடம் கணக்கு முடிக்கப்பட்ட காலாவதியான

கடனுறுதி சீட்டை கொண்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதி என்னிடம் நேரடியாக வந்து தான் தங்களிடம் கடன் வாங்கவில்லை என்றும், அது காலாவதியான சீட்டு என்றும் கூறியதால் நான் தவறுதலாக கொடுத்துவிட்டேன் என கூறிய காரணத்தால் அவர் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. ரூ.30,000/- கடன் வாங்குமளவிற்கு பிரதிவாதிக்கு பொருளாதார வசதி கிடையாது என்றால் சரியல்ல. அதனால்தான் வா.சா.ஆ.1 ல் வாசகம் எழுதப்பட்டுள்ள பேனா மையிற்கும் கையெழுத்து செய்யப்பட்டுள்ள பேனா மையிற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல, ஒன்றாக தான் உள்ளது.

7. காலாவதியான கடனுறுதி சீட்டை, இந்த பிரதிவாதி காலக்கெடுவை நீட்டித்து கொடுத்ததாக பொய்யாக மேல்குறிப்பு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்த இந்த பிராது தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 14.15)**